# வரவுசெலவுத் திட்ட உரை
# 2016

கௌரவ சரத் ஏக்கநாயக அவர்கள்
மத்திய மாகாணத்தின் முதல் அமைச்சர்

மத்திய மாகாண சபை
பள்ளேகலை
2015 டிசம்பர் 14

## வரவு செலவுத்திட்ட உரை - 2016

கௌரவ தலைவர் அவர்களே,
கௌரவ அமைச்சர்களே,
கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே,
கௌரவ உறுப்பினர்களே,

மத்திய மாகாண சபையின் ஆறாவது மாகாண சபையின் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தினை முன்வைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பங்கேங்கும் உங்கள் அனைவரையும் மிகவும் கௌரவத்துடன் வரவேற்கின்றேன். நீங்கள் அனைவரும் தெரிந்துவைத்துள்ளதைப் போன்று இன்று தென்கிழக்கு ஆசியாவின் எந்த நாட்டிலும் காணக் கிடைக்காத அரசியல் முறைமையொன்று எமது நாட்டில் அமைந்துள்ளது. பெரும்பாலான அரசியற் கட்சிகள், பல்வேறு இனத்தவர், தேர்தலொன்றின் மூலம் வெற்றிபெற்ற அரசியல் கட்சிகள் போன்றே போதியளவு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளாத அபேட்சகர்களையும் ஒன்று சேர்த்துக்கொண்டு நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை முறைமை இந்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்ட நாளில் இருந்தே மாகாண மட்டத்தில் மூலதன முதலீடுகள் வழங்கப்பட்டன. எனினும், 2016 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட அடிப்படையில் மூலதன நிதியம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒருசில மாகாண சபைகள் சில மாவட்டங்களில் மேற்கொள்ளும் மூலதன முதலீடுகள் வருடந்தோறும் குறைந்து கொண்டு செல்வதைத் தவிர்த்துக்கொள்வதே இதற்கான காரணமாக உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விசேட நிலைமைகள் மற்றும் நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு மூதலீடு செய்யப்படுவதன் மூலம் மக்களது வேலை வாய்ப்புகள் ஏற்படுதல், அவர்களது வருமானம் அதிகரித்தல், அதன் மூலம் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி அதிகரித்தல் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார நோக்கங்கள் நிறைவேற்றப்படுதல் போன்றவற்றை அடைய முடியும். அது மட்டுமன்றிப் பிரதேச அபிவிருத்திக்கும் இவை துணையாக அமையும்.

கௌரவ தலைவர் அவர்களே,

இந்த வருடம் வரவு செலவுத்திட்டத்தை முன்வைக்கும்போது பழைய முறைமையைக் காட்டிலும் இரண்டு பிரதான மாற்றங்களைக் கைக்கொள்ளவேண்டி ஏற்பட்டது. அவற்றில் ஒன்று, மரபு ரீதியான முறையல்லாது வெற்று நிலையை அடியாகக் கொண்ட வரவு செலவுத்திட்ட முறைமையைக் கடைப்பிடிக்க அரசு தீர்மானித்துள்ளதனால், நாமும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. உண்மையிலேயே இந்த முறைமையை அமெரிக்க ஐக்கிய நாட்டில் தனியார் நிறுவனமொன்று அறிமுகம் செய்து மிகவும் சிறந்த பெறுபேறைப் பெற்றுள்ளது. எனவே, உலகின் பெரும்பாலான நாடுகள் தமது வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க இந்த முறைமையைப் பயன்படுத்தி வருகின்றன. இந்த முறையின் மூலம் ஏதேனுமொரு செயற்றிட்டத்தின் உத்தேச செலவினங்களைக் கணிப்பிடும்போது அதனைச் சரியாகக் கணிப்பிட முடிவதுடன், பரிசீலனைக் கருமங்களையும் மிக இலகுவாகச் செய்துவிடவும் முடியும். இதன் மூலம் அரச நிதி வீணடிக்கப்படாத வகையில் சரியாகச் செலவிடப்படுவதற்கான வழி பிறக்கின்றது.

இரண்டாவது முறை, இதுவரை காலமும் திறைசேரி ஒவ்வொரு மாகாண சபைக்கும் எனச் செலவுத் தலைப்பை வழங்கி, நேரடியாகவே மாகாண சபைக்கு நிதி வழங்கி வந்ததை மாற்றியமைத்து, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஊடாக மாகாண சபைக்கு நிதியை வழங்குவதாகும். இந்த முறை மாகாண சபைக்குப் பொருத்தமற்றதைப் போன்றே, மாகாண சபை முறைமையை முன்னெடுத்துச் செல்வதற்கு இடையூறாகவும் உள்ளதென அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் மாகாணங்களது முதலமைச்சர்கள் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து, அதிமேதகு சனாததிபதி அவர்கள் பழைய முறைமைக்கு ஏற்றவாறு நிதியை வழங்குவதாக உறுதியளித்துள்ளார். எமது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துத் தவறான முறையைத் திருத்திக்கொள்ள இணங்கியமை தொடர்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் நாட்டில் உக்கிரமடைந்திருந்த ஒருசில பிரச்சினைகளை இனங்கண்டு, 4 பிரதான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படத் திட்டமிட்டுள்ளது. அவையாவன:

1. நச்சுத்தன்மை அற்ற தேசிய உணவுப் பொருட்கள் உற்பத்தி
2. சிறுநீரக மற்றும் டெங்கு நோய்களை அடியோடு அகற்றி, மக்களது போசணை மட்டத்தை அபிவிருத்தி செய்வது
3. போதைப் பொருட்களது பாவனையைக் குறைப்பது

4. சுற்றாடலைப் பாதுகாத்து நாட்டின் வனவளத்தை இலங்கையின் நிலப்பரப்பில் 32% ஆக அதிகரிப்பது

இந்த நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென எமது மாகாண சபையும் இணைந்து செயற்படுதல் வேண்டும் என்பதனால், இதன் பின்னர் இதற்கென விசேட கவனத்தை நாம் செலுத்துதல் வேண்டும்.

கௌரவ தலைவர் அவர்களே,

எமது மாகாண சபைக்கு 2016 ஆம் ஆண்டில் நிதி ஆணையத்தின் ஊடாகத் திறைசேரியின் மூலம் கிடைக்கவுள்ள வழங்கல்களையும், அவற்றைப் பிரித்து வழங்கும் முறைகளையும் இப்போது முன்வைக்க நான் ஆயத்தமாகின்றேன்.

| **வருமானங்களும் வழங்கல்களும்** | **ரூ. மில்லியன்** |
|---|---|
| ஒன்றிணைந்த வழங்கல்கள் | 23,374.837 |
| அரசு வழங்கும் வருமானங்கள் | 3,294.000 |
| மாகான வருமான இலக்கு (முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்றத் தண்டங்கள் தவிர்ந்த) | 1,450.000 |
| உள்ளுராட்சி அமையங்களுக்கு மாற்றப்படவேண்டிய வருமானம் | |
| முத்திரைத் தீர்வைகள் | 1,200.000 |
| நீதிமன்றத் தண்டங்கள் | 100.000 |
| மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல்கள் | 3684.300 |
| உபமானியப் பங்களிப்பு வழங்கல்கள் | 423.000 |
| வெளிநாட்டு உதவிகள் | 1067.040 |
| மொத்தம் | **34,593.177** |

இந்த ஒன்றியைந்த வழங்கல்களுக்குள் ரூ. 2,731.5 மில்லியன் சம்பளக் குறைநிரப்புக்கும், உறுப்பினர்களது கொடுப்பனவுகளுக்கும் என உள்ளுராட்சி அமையங்களிடையே மாற்றப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆசிரியர்களது நிலுவைச் சம்பளங்களை இவ்வருடத்தில் செலுத்தி முடிக்க வென ரூ. 700.0 மில்லியனும் ஒதுக்கப்படும்.

| **செலவின முன்னுரைப்பு** | **ரூ. மில்லியன்** |
|---|---|
| மூலதனச் செலவுகள் | 5,174.340 |

| | |
|---|---|
| மீள்வரும் செலவினங்கள் | 29,418.837 |
| | **34,593.17** |

மீள்வரும் செலவினங்கள் பின்வரும் வகையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

| | **ரூ. மில்லியன்** |
|---|---|
| ஆளுநர் அவர்களும் பணியாட் குழுவினரும் | 14.250 |
| சபைச் செயலாளர் அலுவலகம் | 51.094 |
| முதலமைச்சர் மற்றும் பணியாட் குழுவினரும் | 31.201 |
| உள்ளூராட்சித் திணைக்களம் | 2,700.000 |
| சுகாதார அமைச்சும் பணியாட் குழுவினரும் | 13.688 |
| பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் பணியாட் குழுவினரும் | 16.219 |
| கைத்தொழில் அமைச்சும் பணியாட் குழுவினரும் | 13.789 |
| விவசாய அமைச்சு | 14.186 |
| மாகாண அரச சேவைகளின் பணியாட் குழுவினரது சம்பளங்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் | 26,564.140 |
| **மொத்தம்** | **29,418.837** |

இந்த மூலதனச் செலவுகளுக்குள் வெளிநாட்டு உதவிகள் ரூ. 1067.04 மில்லியன் ஆகும். இந்தத் தொகை குறித்த செயற்றிட்டங்களிலேயே செலவிடப்படுதல் வேண்டும். எஞ்சிய தொகையான ரூ. 4107.30 மில்லியன் மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென உரிய விடயங்கள் தொடர்பான அமைச்சுக்களிடையே பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

கௌரவ தலைவர் அவர்களே,

மூலதனச் செலவுகள் எனப் பெறப்படும் தொகை 2015 ஆம் ஆண்டைவிட ரூ. 795 மில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**கல்வி**

கௌரவ தலைவர் அவர்களே,

கல்வித்துறையில் முன்னேற்றம் என நாம் கருதுவது பிள்ளைகளைப் பரீட்சைகளில் சித்தியடையச் செய்வது மட்டுமல்லாது, அவர்களைச் சமூகத்தில் நற்பிரசைகளாகத் திகழவைப்பதுமாகும். இதற்கெனப் பாடசாலைக் கல்வியை மட்டுமல்லாது தொழிற்கல்வியையும் வழங்குதல் வேண்டும். இதன் அடிப்படையில் பௌதிக மற்றும் மனித வளங்களை வழங்குவது எமது கருமமாக இருப்பதுடன், கடந்த ஆண்டில் பௌதிக வளங்களெனப் பாடசாலைக் கட்டடங்களை நிருமாணித்தல், அவற்றைத் திருத்தியமைத்தல், ஆசிரியர் குடிமனைகளை அமைத்தல், அவற்றைத் திருத்தியமைத்தல், பாடசாலைகளுக்கெனச் சுகநல வசதிகளை வழங்குதல், மின்வசதி வழங்குதல், மேசை கதிரைகள் வழங்குதல் போன்ற கருமங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், மனிதவளங்கள் என்ற வகையில் 1021 சிங்கள மொழிமூல ஆசிரியர்களையும், 1074 தமிழ் மொழிமூல ஆசிரியர்களையும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன், இவர்களுள் பெரும் எண்ணிக்கையிலானோர் அதாவது 1274 பேர் நுவரெலியா மாவட்டத்துக்கென வழங்கப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக 1174 ஆசிரியர்கள் ஆசிரிய சேவையிலிருந்து பதவி உயர்வு வழங்கப்பட்டுக் கல்வியை உயர் மட்டத்துக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் கல்வித்துறையின் பௌதிக வளங்களை மேலும் விரிவடையச் செய்யவென ரூ. 1250 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழியப் படுவதுடன், இதற்கு மேலதிகமாக உலக வங்கி உதவித்திட்டத்தின் கீழ் ரூ. 430 மில்லியனும், யுனிசெப் உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 24.04 மில்லியனும் வழங்கப்படும். இதற்கமைய, 2015 ஆம் ஆண்டைவிட 2016 ஆம் ஆண்டில் ரூ. 1095 மில்லியன் (200%) மேலதிகமாகக் கல்விக்கான மூலதனச் செலவுகளாக முதலீடு செய்யப்படும்.

## காணி அபிவிருத்தி

மாகாண சபைக்குள் அரச அமையங்களுக்குச் சொந்தமான காணிகளை உரித்துரிமையை ஆக்கிக் கொள்வதற்கெனவும், சட்டவிரோதக் குடியேறிகளிருப்பின் அவர்களிடமிருந்து உரித்துரிமையைப் பெறுவதும், காணிகளுக்குத் தேவையான சட்டவிதிகளைச் செயலுக்குக் கொண்டுவரவும், காணித் தரவு வங்கியைக் காலத்துக்கேற்றவாறு திருத்தியமைக்கவும், முதலீடுகள் வரும்போது அவற்றுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான காணிகளைத்

தேர்ந்தெடுத்து ஒதுக்கிக்கொள்ளவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்கென ரூ. 5.0 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## திண்மக் கழிவுப்பொருள் முகாமை

திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்வது உள்ளூராட்சி அமையங்களது அடிப்படைப் பொறுப்பாக உள்ளது. குறிப்பாக, நகராக்கம் மற்றும் குடியிருப்புகள் ஏற்படுதல் போன்ற காரணிகளால் உண்டாகும் குப்பை கூளங்களின் அளவு அதிகரித்துள்ளது. கழிவுப்பொருட்களது முகாமைக்கென, அதாவது அவற்றைப் பொருத்தமான இடங்களுக்குக் கொண்டுசெல்வதும் அவற்றிலிருந்து கூட்டெரு தயாரிக்கவும், வீடுகளில் சேரும் குப்பை கூளங்களை வீட்டிலேயே கூட்டெருவாக ஆக்கிக் கொள்ளவும் மக்களை அறிவூட்டம் செய்யவேண்டியுள்ளது. இந்தத் திட்டத்தை மேலும் மேலும் செயற்படுத்த வேண்டியுள்ளது. இதற்கென ரூ. 55 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

சனத்தொகை அதிகரிப்பு, குடியிருப்புகள் தோன்றுதல் போன்ற காரணிகளால் கடந்த காலங்களைப் போன்றே மயானங்களை அமைத்துக்கொள்ள இடவசதிகள் இல்லாத காரணத்தால், உள்ளூராட்சி அமையங்களால் தகனசாலைகளை அமைப்பது காலத்தின் தேவையாக உள்ளதை நான் அறிவேன். எனவே, நகர்ப்புற, நகரை அண்டிய பிரதேசங்களில் அமைந்துள்ள மயானங்களில் தகனசாலைகளை அமைத்தல் மற்றும் கிராமப்புறங்களில் விளையும் காய்கறிகள், பழங்கள் போன்ற விவசாய உற்பத்திகளைப் போன்றே ஏனைய விளைபொருட்களை விவசாயிகள் இலகுவில் விற்பனை செய்துகொள்வதற்காகவும், தற்காலத்தில் கிராமிய உற்பத்திகளுக்கு நுகர்வோரிடையே கிராக்கி இருப்பதனால் வாரச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதும் முக்கியமாகும். எனவே, பொருத்தமான இடங்களில் வாரச் சந்தைகளை அபிவிருத்தி செய்து, உற்பத்தியுயாளர்களைப் போன்றே நுகர்வோருக்கும் வசதிகள் ஏற்படும் வகையில் சேவைகளை வழங்குவதற்கென ரூ. 25 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## குடிநீர்

தற்போது அதிகமான நீர் மூலாதார இடங்கள் அசுத்தமாகக் காணப்படுகின்றன. அந்த நீரைப் பயன்படுத்துவதன் மூலம் மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது. எனவே, சுத்தமான குடிநீரை

விநியோகிப்பது எமது கடமையாக உள்ளது. புதிய குடிநீர்த் திட்டங்களைச் செயற்படுத்துவது, செயற்படாது காணப்படும் நீர் வழங்கல் திட்டங்களை மீள் சீராக்கம் செய்வது, நீர் மூலாதாரங்களைப் பாதுகாப்பது, பிரசைகள் மூலாதார அமையங்களை வலுவூட்டுவது போன்ற கருமங்களுக்கென ரூ. 50 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## உள்ளூராட்சிப் பாதைகளது அபிவிருத்தி

உள்ளூராட்சி அமையங்கள் மூலம் உரிய தர நிருணயங்களுக்கு அமையப் பரிய அளவில் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தாலும், மாகாணத்தின் புவியமைப்பு, காலநிலை என்பவை காரணமாகப் பாதைகள் நாளாந்தம் சீரற்ற நிலைக்கு உட்படுகின்றன. இதன் காரணமாகப் பாதைகளை நிதமும் திருத்தியமைக்கவும், பராமரிப்புச் செய்யவும் வேண்டி ஏற்படுகின்றது. குறிப்பாக மக்கள் அரசியல் அதிகாரங்களிடம் வேண்டி நிற்பதும் பாதைகளைத் திருத்தி அமைக்கவே ஆகும். எனவே, பஸ் போக்குவரத்துச் செய்யும் பாதைகளுக்கு முன்னுரிமை வழங்கி, உள்ளூராட்சிப் பாதைகள் அபிவிருத்திக்கென ரூ. 110 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி

நல்ல, முழுமையான ஆளுமை கொண்ட ஒருவரை நாட்டுக்கு வழங்க வேண்டுமெனின், அவரைச் சிறு பிராயத்திலிருந்தே நல்வழிக்குக் கொண்டுவருதல் வேண்டும். முன் பிள்ளைப்பருவக் கல்வியை வழங்குவதற்கென நடத்தப்படும் ஒருசில முன்பள்ளிகள் சரியான தர நிருணயங்களுக்கு அமைவானதாக இல்லை. அவற்றில் கற்பிக்கும் ஆசிரியைகளுக்குத் தேவையான கல்வியோ அல்லது பயிற்சியோ இருப்பதில்லை. எனவே, முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கெனத் தனியான ஒரு அலகை ஏற்படுத்தி, அதன் மூலம் முன் பிள்ளைப்பருவப் பிள்ளைகளுக்கான கல்வியை வழங்குதல், அவர்களது உடல், உள வளர்ச்சி, சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல், இது தொடர்பில் செயற்படும் அமையங்களைப் பதிவுசெய்தல், முன் பிள்ளைப்பருவப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் நிலையங்களது பண்பளவான பராமரிப்பு மற்றும் பயிற்றுநர்களைப் பயிற்றுவித்தல் போன்ற பல்வேறு கருமங்கள் நிறைவேற்றப்படவேண்டியுள்ளன. இதற்கென ரூ. 5.0 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## கலாசார விவகாரங்கள்

மத்திய மாகாணம் என்பது கலாசாரத் துறையில் மிகவும் முக்கியமான மாகாணமாகும். புராதன புண்ணியத்தலங்கள் ஏராளம் உண்டு. புராதன ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் போன்றன தாராளமாகக் காணப்படுகின்றன. மற்றும் பழங்காலக் கிராமிய நடனங்கள், நாட்டியங்கள், பாடல்கள் போன்றவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. கடந்த ஆண்டில் கண்டியைச் சூழவுள்ள தேவாலயங்களின் பெரஹரா விழாவை ஒளிப்பதிவு செய்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டோம். இது போன்ற நடவடிக்கைகைளை எதிர்காலத்தில் மேற்கொள்ளவென உத்தேசித்துள்ளதுடன், பௌத்த, சிங்கள, முஸ்லிம் கலாசார விவகாரங்களுக்கென ரூ. 8.0 மில்லியனையும், இந்து கலாசார விவகாரங்களுக்கென ரூ. 1.0 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## சுற்றுலா, வர்த்தக, வாணிப விவகாரம்

2015 ஆம் ஆண்டில் இற்றைவரை மத்திய மாகாணத்துக்குள் 2.8 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இவர்களுள் பெருமளவிலானோர் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு வருகை தந்துள்ளனர். கண்டியில் தரித்திருந்தோர் இவர்களுள் மிகச் சிலரேயாகும். அத்துடன், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் பெருமளவில் மத்திய மாகாணத்துக்கு வந்துள்ளனர். மத்திய மாகாணத்துக்குள் முக்கியமான சுற்றுலா இடங்களில் நிலவும் வசதிகள் குறிப்பிடத்தக்க அளவில் கவர்ச்சிகரமாதாகக் காணப்படவில்லை. சுற்றுலாப் பயணிகளது வருகையின் காரணமாகத் தேசிய சிறு கைத்தொழில்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் நல்ல வருவாயை ஈட்டிக்கொள்ள முடிந்துள்ளது. இந்த சிறுகைத்தொழில்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கெனவும் பயணிகளைக் கவரும் வகையில் சுற்றுலா இடங்களில் காணப்படும் குறைபாடுகளை நிறைவு செய்து சுற்றுலாப் பயணிகளை மத்திய மாகாணத்துக்குள் ஈர்த்தெடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நடுவண் அரசின் சுற்றுலா அமைச்சின் உதவியுடன் மாகாணத்தின் சுற்றுலாத் துறையை விருத்தி செய்யவும், மத்திய மாகாணத்துக்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் திட்டத்தின் நடவடிக்கைகளைச் செயற்படுத்திச் சுற்றுலாத் துறையின் மூலம் மத்திய மாகாணத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளது வருகை ஆண்டு தோறும் அதிகரித்து வந்துள்ளதனால், அவர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கெனத் தகவல் நிலையமொன்றை அமைக்கவும், உள்ளக சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யவும் சுற்றாடல் சுற்றுலாத் துறையையும் சனசமூக சுற்றுலாத்துறையையும் விருத்தி செய்து, கிராமிய மக்களுக்கும் வருவாயை ஈட்டிக்கொள்ளவும் வழிகள் செய்யப்படும். மேலும், வர்த்த மற்றும் வாணிப நடவடிக்கைகளையும் ஊக்கப்படுத்த வேண்டியுள்ளது. வர்த்தகங்களைப் பதிவு செய்யாத நிறுவகங்களைப் பதிவுசெய்து, மாகாணத்துக்கு வருவாயை ஈட்டிக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றுலா, வர்த்தக மற்றும் வாணிப நடவடிக்கைகளுக்கென ரூ. 60 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## நூலகங்கள் அபிவிருத்தி

மத்திய மாகாணத்தின் நூலக மற்றும் தகவல் நிலையம் எமது மாகாணத்தில் விசேடத்துவம் பெறும் ஒரு அமையமாகும். கல்வி கற்கும் பிள்ளைகளப் போன்றே வளர்ந்தோரும் இதன் மூலம் அறிவைப் பெற்றுக்கொள்கின்றனர். இந்த நிலையத்தைக் கவர்ச்சிகரமான இடமாக ஆக்கிக் கொள்வதற்காகவும், புதிய புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் ரூ. 4.5 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## சுகாதார சேவைகள்

சுகாதாரத் துறையின் மூலம் நாம் எதிர்பார்ப்பது சுகதேகியான, சுறுசுறுப்பான மக்களைத் தோற்றுவிப்பதாகும். இதற்காகத் தொற்று நோய்கள் மற்றும் தொற்றாத நோய்களது பரவலைக் குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். மேலும், இதற்கு முன்னர் நாம் இலக்காகக் கொண்டவாறு 2016 ஆம் ஆண்டளவில் சிசு இறப்பு விகிதத்தை 4 (1000 பிறப்புக்களில்) ஆகவும், கர்ப்பிணித் தாய் இறப்பு விகிதத்தை 12 (100,000 பிறப்புக்களில்) ஆகவும் குறைத்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், நாட்டினுள் பரவிச் செல்லும் டெங்கு, விசர்நாய்க்கடி, எலிக் காய்ச்சல், சிறுநீரக நோய் போன்றவற்றையும் குறைத்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கவேண்டியுள்ளது. இதற்கென மாகாணத்தின் மருத்துவ மனைகளுள் நிலவும் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளைப்

பெற்றுக்கொள்ளவும் வேண்டும். குறிப்பாக, மருத்துவ மனைகளின் திருத்தவேலைகள், சுகநலச் சேவைகளை நிறைவு செய்து அவற்றை மக்களது மனங்கவர் இடமாக ஆக்கவேண்டியது அவசியமாகும். மேற்குலக மருத்துவத்தின் விருத்திக்கென ஒன்றியைந்த நிதியத்திலிருந்து ரூ. 795.0 மில்லியனையும், உலகவங்கி உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 365 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிவதுடன், கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட தெல்தெனிய ஆதார மருத்துவ மனையின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்வதற்கென JICA உதவியின் கீழ் ரூ. 248 மில்லியனையும் ஒதுக்கவுள்ளேன்.

## ஆயுர்வேத மருத்துவ விவகாரம்

தேசிய மருத்துவ முறைமையின்பால் மக்களது ஆர்வம் அதிகரித்து வருகின்றது. தேசிய மட்டத்தில் மட்டுமல்லாது வெளிநாட்டு நோயாளர்களும் இலங்கையின் தேசிய மருத்துவ முறையின் கீழ் சிகிச்சை பெறுவதற்கென வருகை தருகின்றனர். அவர்களுக்கு இந்தச் சேவையை உச்ச அளவில் வழங்கவும், மறைந்து கொண்டிருக்கும் மரபு ரீதியான மருத்துவ முறை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, எமக்குத் தேவையான மருந்து மூலிகைகளை எமது மாகாணத்திலேயே பயிரிட்டுக்கொள்ளவும், தேவையான மருந்து வகைகளை நாட்டுக்குள் பயிரிட்டு வெளிநாட்டுக்குச் செல்லும் செலாவணியை மிச்சம் பிடிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது அதிகரித்த கேள்வியைக் கொண்டுள்ள பணம் செலுத்தும் வார்ட் களது எண்ணிக்கையை அதிகரித்து மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கவெனவும், தேசிய மருத்துவ முறையின் விருத்திக்கெனவும் முன்னைய வருடத்தை விடவும் 400% அதிகரிப்பான ரூ. 120 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## நன்னடத்தை விவகாரம்

பெற்றோரது அல்லது சமூகத்தின் பல்வேறு தரப்பினரது காரணங்களை முன்னிட்டு நிர்க்கதியான நிலைக்கு உட்படும் பிள்ளைகளைப் பராமரிக்கவும், அவர்களுக்குத் தேவையான கல்வியை வழங்கிச் சமூகத்தின் நற்பிரசைகளாக அவர்களை மாற்றியமைக்கவும் வேண்டிய கடமை எமக்கு உண்டு. பிள்ளைகளை விட்டுச் செல்லும், பெற்றோர் இல்லாத பிளளைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது, பல்வேறு துஷ்பிரயோகங்கள் காரணமாக நீதிமன்றங்களால் நன்னடத்தைக்கு

உட்படுத்தப்படும் பிள்ளைகளுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவது போன்றவற்றுக்கும், அவர்களைச் சமூகத்தின் ஏனைய பிள்ளைகளைப் போன்று வாழவைப்பது போன்றவற்றுக்கும் தேவையான சுற்றாடலை அமைத்துக் கொடுப்பது எமது கடமையாகும். இவற்றைச் செயற்படுத்துவதற்கென ரூ. 15 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## சமூக சேவைகள்

மூத்தோரை மதித்தல், நிர்க்கதியானோருக்கு உதவுதல் பற்றிப் புத்தரது போதனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் முதியோரது எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமையத்தின் குடித்தொகை நிதியம் சுட்டிக்காட்டுகின்றது. 2025 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு ஐந்து பேரில் 60 வயது அல்லது அதனைத் தாண்டிய ஒருவர் இருப்பார் எனக் குறிப்பிடப்படுகின்றது. முதியோரது எதிர்பாராத அதிகரிப்பு வீதம் கிராமிய மற்றும் நகர்ப்புறங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகக் காணப்படுகின்றது. கிராமப்புறங்களில் முதியோரை அவர்களது குடும்பத்தினர் பராமரிப்புச் செய்கின்றனர். நகர்ப்புறங்களில் முதியோரது எண்ணிக்கை குறைவாக உள்ளது. அவர்கள் நிறுவனப்படுத்தப்பட்டுப் பிரசைகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, கிராமப்புறங்களில் குடும்ப வருவாயைப் பெருக்கிக்கொள்வதிலும், நகர்ப்புறங்களில் அரசும் பிரசைகளும் அவர்களைப் பராமரிப்பது, சுகநலத்துடன் பாதுகாப்பது, அவர்கள் மூலம் சமூகத்துக்கு ஏதும் நன்மைகள் செய்ய முடியுமானோரிடம் சேவைகள் பெறுவது என்பவற்றுக்கான திட்டங்களை இயற்றுதல் வேண்டும்.

மூத்த குடிமக்களது கலாசார அறிவு, அவர்களது அனுபவங்கள் என்பவற்றைப் பயன்படுத்திப் புதிய சந்ததியினருக்கு அவற்றை வழங்க ஏற்பாடுகள் செய்யவேண்டியுள்ளது. மேலும், முதியோருக்கான மூக்குக்கண்ணாடிகள் வழங்குதல், யானைகள் - மனிதர்களது போராட்டம் காரணமாக நிர்க்கதியாகும் ஆட்களுக்கு உதவுதல், பல்வேறு அங்கவீனங்களுக்கு உட்பட்டுள்ள ஆட்களுக்கு உதவுதல், இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்டு உள்ளவர்களுக்கு உதவுதல் போன்ற பல்வேறு சமூகப் பணிகளுக்கென ரூ. 17 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

**விவசாயம்**

விவசாய அபிவிருத்திக்கென நிதியை ஒதுக்குவதன் மூலம் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கவும் அதற்கான பரம்பல் - விரிவாக்கற் சேவையை விரிவுபடுத்தவும் அதன் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான வித்துக்களை உற்பத்தி செய்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது. விசேடமாக மத்திய மாகாணத்துக்கு மட்டுமன்றி, ஊவா மாகாணத்துக்கும் தேவையான போஞ்சி வித்துக்களை மத்திய மாகாணத்திலேயே உற்பத்தி செய்கின்றோம். மேலும், விதை உருளைக்கிழங்கு, பெரிய வெங்காய விதைகள் உற்பத்தி எனபவற்றின் மூலம் உயர்தரம் கொண்ட வித்துக்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை எமது மாகாணத்திலேயே உற்பத்தி செய்வது எமது நோக்கமாகும். மேலும், வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் வீட்டுத் தேவைக்கான காய்கறிகள், பழவகைகளை உற்பத்தி செய்துகொள்ளவும் வீட்டு மக்களைத் தூண்டுவது எமது நோக்கமாகும். இதன் மூலம் குடுமப்ப போசணை மட்டத்தை உயர்த்தவும், குடும்ப வருவாயைப் பெருக்கவும் வழி பிறக்கின்றது.

எமது பழைய நெல்லினங்களிலிருந்து பெறப்படும் விளைச்சல் அறுவடை நவீன கலப்பின நெற்பயிர்களிலிருந்து பெறப்படும் அறுவடையைவிடக் குறைவாக இருந்தாலும், அதன் செலவுகளில் குறைவில்லை என்பதனால், பழைய நெல்லினங்களின் பாவனை, கெம் முறைகள் போன்ற பயிர்கொல்லி முறையைக் கடைப்பிடித்துப் பண்பளவான அரிசி உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் நச்சுக்களற்ற உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து மக்களது போசணை மட்டத்தை அபிவிருத்தி செய்து, நோய்த் தொற்றுக்களிலிருந்து தவிர்ந்து கொள்ள முடியும்.

அதுமட்டுமன்றி ஏற்றுமதிச் சந்தையை மையமாகக் கொண்டு பழவகைகள், பூக்கள், காய்கறிகள் போன்ற பயிர்களை வர்த்தக அடிப்படையில் பயிரிடுவதற்கெனச் சிறிய அளவு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும், தூர்ந்துபோன வயல் நிலங்களில் மாற்றுப் பயிர்களைப் பயிரிட ஊக்குவிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கென ரூ. 230 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

ஒருசில விவசாயப் பிரதேசங்களில் பாதைத் தொகுதி மிகவும் சீரற்றுள்ளது. விவசாய விளைபொருட்களுக்குச் சேதங்கள் ஏற்படாதவாறு அவற்றைப் போக்குவரத்துச் செய்யவும், பசளை, விதைகள் என்பவற்றகைக் கொண்டு செல்வதற்கும் விவசாயப் பிரதேங்களது பாதைத் தொகுதியை அபிவிருத்தி செய்யவேண்டியுள்ளது. இதற்கென ரூ. 30.0 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

அது மட்டுமன்றி, கௌரவ தலைவர் அவர்களே, பெருந்தோட்டங்களில் அமைந்துள்ள பாதைகளையும் பராமரித்துக் கொடுப்பது எமது கடமையாக உள்ளது. சிறிய தேயிலைத் தோட்டங்கள், தனியார் தேயிலைத் தோட்டங்கள் என்பவற்றின் மூலம் பெருமளவு வருமானம் நாட்டுக்குக் கிடைக்கின்றது. குறிப்பாகப் பெருந்தோட்டப் பகுதிகளில் பயிரிடப்படும் காய்கறிகள், பழவகைகள், பால் என்பவற்றைச் சந்தைக்குக் கொண்டுவருவதற்ககெப் பெருந்தோட்டப் பாதைகளது அபிவிருத்திக்காக ரூ. 30 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

**சிறிய நீர்ப்பாசனங்கள்**

எமது மாகாணத்தில் அமைந்துள்ள குளங்கள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள் என்பவற்றில் பெரும்பாலானவை இதுவரை நல்ல நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்ற வேளையில், அதிக மழை காரணமாகத் தகர்ந்து போயுள்ள குளங்கள் அணைகள் போன்றவை நீண்ட காலமாகத் திருத்தியமைக்க முடியாமற் போயின. அவற்றுள் சிறிய நீர்ப்பாசனங்களும் ஏராளமாக உண்டு. விவசாயிக்குத் தேவையான நீரை உரிய நேரத்தில் வழங்குவது, ஒரு அலகிலிருந்து பெறப்படும் விளைவைப் பெருக்கிக்கொள்வது மற்றும் நச்சுத்தன்மைகளற்ற உணவுப்பொருட்கள் உற்பத்தியில் பங்களிப்பு வழங்குவது என்பவற்றை நோக்காகக் கொண்டு சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்புக்கென ரூ. 35 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## விலங்குவள உற்பத்திகள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள்

புராதன காலந் தொட்டே எமது நாட்டு மக்களுக்குப் போசணை வழங்கப்பட்டுள்ள ஒரு வழி விலங்குவள உற்பத்திகளாகும். இன்று உள்ளதைப் போன்று உயர் விளைவைத் தரும் விலங்குகள் அக்காலத்தில் இல்லாதிருந்தாலும், ஒவ்வொரு வீட்டிலும் விலங்குகள் வளர்க்கப்பட்டன. இதனால் ஏராளமான விலங்குகள் அக்காலத்தில் காணப்பட்டன. எனவே, பால் மற்றும் பால் உற்பத்திகள் மூலம் மக்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடிந்துள்ளது.

மத்திய மாகாணத்தின் பாலுற்பத்தி, தேசிய உற்பத்தியின் 32% ஆக உள்ளதென இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இதனையிட்டு நாம் மகிழ்ச்சியடையலாம். விசேடமாக நுவரெலியா மாவட்டத்தில் இது பற்றிய நல்ல வாய்ப்புகள் காணப்படுவதனால், பால் உற்பத்தியாளர்களது எண்ணிக்கை தவிர, நல்லினப் பாற்பசுக்களது எண்ணிக்கையையும் அதிகரித்து, எமக்குத் தேவையான பாலின் அளவை நாமே உற்பத்தி செய்துகொண்டு வெளிநாட்டுக்குச் செல்லும் செலாவணியை மிச்சம் பிடிப்பது, விலங்குகளது சுகநிலையை நல்ல தரத்துக்குக் கொண்டுவருவது, கால்நடை மருத்துவர்களது தேவைகளை நிறைவு செய்து உயர்ந்த பரம்பல் சேவையை வழங்குவது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பாலுற்பத்தி மட்டுமல்லாது முட்டை உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்வதற்கு வீடுகள் மட்டத்தில் இயலுமையும் வாய்ப்பும் உள்ள இடங்களைத் தெரிந்து அவர்களுக்குத் தேவையான அறிவையும் குஞ்சுகளையும் வழங்கி, முட்டை உற்பத்தியையும் அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கென விலங்குவள உற்பத்திக்கும் சுகாதார நடவடிக்கைகளுக்கு ரூ. 139 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில்

நன்னீர் மீன்களது உற்பத்தி தொடர்பில் மக்களது கேள்வி அதிகரித்து வருகின்றது. எனவே, நன்னீர் மீன்பிடியை அதிகரித்து, மக்களது போசணைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அத்துடன், மாகாணத்துக்குள் அமைந்துள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் என்பவற்றில் நன்னீர்

மீன்களை வளர்க்கும் சாத்தியங்கள் காணப்படுவதனால், அவற்றில் மீன் குஞ்சுகளை இட்டும், நன்னீர் மீனவர்க்குத் தேவையான உபகரணங்களையும் பயிற்சியையும் வழங்கி நன்னீர் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கென ரூ. 7.0 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## சுற்றாடல் விவகாரம்

கௌரவ தலைவர் அவர்களே, இதற்கு முன்னைய ஆண்டுகளில் இந்தச் சபையில் கூறப்பட்டதற்கமைய, சுற்றாடலைப் பாதுகாப்பது எமக்கு மட்டுமல்லாது எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் முக்கியமானதாகும். இதனை அறிந்துவைத்துள்ள அதிமேதகு சனாதிபதி அவர்கள் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கென விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளார். அவற்றில் ஒன்றாகக் கருதப்படுவது நாட்டின் மொத்த வனப் பரப்பை 32% இனால் அதிகரிப்பதேயாகும். இது ஒரு தேசியத் திட்டமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அது ‘‘வனரோபா’’ எனப் பெயரிட்டு, கம்பளையில் ஆரம்பம் செய்யப்படடுள்ளது. இத்திட்டம் நீரேந்து பிரதேசமொன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானதென்றே நான் காண்கின்றேன். மேலும், இந்தத் திட்டத்தை ஒவ்வொரு வருடத்திலும் செயற்படுத்தவும், அனைத்துத் தரப்பினரையும் சேர்த்துக்கொண்டு உள்ளதனால் இது வெற்றிகரமானதாக அமையும் எனவும் எதிர்பார்க்கின்றேன். அது மட்டுமன்றி, சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பில் நாம் அறிமுகப்படுத்தியுள்ள திட்டங்களை அதே வழியில் முன்னெடுத்துச் செல்லவும் எண்ணியுள்ளேன். இதற்கென ரூ. 6.5 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். ,

## சிறு கைத்தொழில்கள்

மத்திய மாகாணத்துக்குள் சிறிய அளவு கைத்தொழில் முயற்சியாளர்கள் அதிகம் உள்ளனர். அவர்களது உற்பத்திகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சந்தைக் கேள்விகள் உண்டு. இவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் சந்தை வாய்ப்புகளைப் பெறவும், புதிய தொழில் முயற்சியாளர்களை அறிமுகம் செய்யவும், புதிய தொழினுட்பங்களை அறிமுகம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், சிறுகைத்தொழில்கள் மற்றும் கைவினைக் கைத்தொழில்கள் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாகக் கைவினைக்

கைத்தொழிலாளர்கள் பலர் அதி விசேட விருதுகளைப் பெற்றுள்ளதுடன், அதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மாகாண சபைக்குரிய தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோருக்குச் சிறந்த கேள்வி காணப்படுகின்றது. மிகச் சிறந்த தொழில்களை அவர்கள் பெற்றுள்ளனர். எனவே, தொழிற் பயிற்சி நிலையங்களில் வசதிகளை அதிகரித்து, சிறந்த போதனாசிரியர்களை நியமித்து இளைஞர் யுவதிகளுக்குச் சிறந்த தொழிற் பயிற்சியை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கைத்தொழிற் துறையின் அபிவிருத்திக்கென ரூ. 18 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## நெசவுக் கைத்தொழில்

நாட்டின் நெசவுக் கைத்தொழிலில் மத்திய மாகாணத்துக்கு விசேட இடமுண்டு. எனினும், எமது நெசவு நிலையங்களில் குறைபாடுகள் அதிகம் காணப்படுகின்றன. இயந்திரங்கள் மிகவும் பழைமை வாய்ந்தவை. கட்டடங்கள் மற்றும் இயந்திரங்களைப் புதுப்பித்து, உயர்தரத் துணிகளை உற்பத்தி செய்யவும், நெவசாளர்களது தேவைகளை நிறைவு செய்து அவர்களது நிரந்தர வருவாயை உறுதிப்படுத்துவதற்கும், புதிய நெசவாளர்களைக் கைத்தொழிலில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள, கையிருப்புகளை விரைவில் சந்தைப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும். இதற்கென ரூ. 10.0 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## இளைஞர் விவகாரம் மற்றும் மகளிர் விவகாரம்

மாகாணத்து இளைஞர் யுவதிகளது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்கள் தீய செயற்பாடுகளில் ஈடுபடாதிருக்கவும் வழி செய்து அவர்களை நற்பிரசைகளாக ஆக்குவது எமது கடமையாகும். வேலையில்லாத இளைஞர் யுவதிகளுக்குப் பொருத்தமான வேலைகளில் ஈடுபடத் தேவையான தொழிற் பயிற்சிகளை வழங்குதல், நற்பிரசைகளாகத் திகழத் தேவையான அறிவை வழங்குதல், போதைப்பொருட் பாவனையில் ஈடுபடாதிருக்க நடவடிக்கை எடுத்தல் உட்பட இளைஞர் யுவதிகளது நலன் கருதி ரூ. 5.0 மில்லியனையும், மாகாணத்து யுவதிகள், மகளிர் எமது சமூகத்தின் நலனில் பெருமளவில் பங்கெடுப்பதனால் அவர்களை நாம் மறந்துவிடாது அவர்களுக்கு நவீன

தொழினுட்பங்களை அறிமுகம் செய்து அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கேற்கச் செய்து குடும்ப வருவாயைப் பெருக்கிக்கொள்ளச் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி விடவும், இவை பற்றிய அறிவூட்டம் செய்து நிறைவான மகளிர் பரம்பரையைத் தோற்றுவிக்கவுமென ரூ. 5.0 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## விளையாட்டு மற்றும் விளையாட்டு மைதான அபிவிருத்தி

கடந்த வருடங்களில் மத்திய மாகாணத்து விளையாட்டு வீரர் வீராங்களைகள் பெருமளவில் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் நாட்டுக்குப் பெரும் கீர்த்தியைப் பெற்றுத் தந்துள்ளனர். எதிர்காலத்திலும் மாகாணத்துக்குள் விளையாட்டை உயர் மட்டத்துக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். சிறந்த விளையாட்டு வீரர் வீராங்கனைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கவும், இரண்டாம் வரிசை வீரர் வீராங்கனைகளுக்கான பயிற்சிகளை வழங்கவும் விளையாட்டுப் பயிற்சிக்கான மக்களது ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கெள்ள உடற்பயிற்சிகளை மேற்கொள்வதற்கு வசதியாக விளையாட்டு மைதானங்களில் வசதிகளை மேம்படுத்தவுமென ரூ. 22.5 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## மாகாணப் பாதைகளது அபிவிருத்தி

மாகாண சபைக்குச் சொந்தமான C மற்றும் D தரப் பாதைகள் 2244 கிலோ மீற்றர்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை நல்ல நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும், மேலும் 1000 கிலோமீற்றருக்குக் கிட்டிய பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளன. விசேடமாகத் தேசியப் பாதைகள் தொகுதியுடன் நல்ல தொடர்பைப் பேணும் வகையில் C மற்றும் D தரப் பாதைகளைக் காப்பற் செய்யவும், காப்பற் செய்யப்படாத பாதைகளில் தார் அல்லது கொங்கிறீட் இடவும் C மற்றும் D தரப் பாதைகளது கட்டமைப்பின் நிருமாணங்களுக்குச் சேதம் ஏற்படாத வகையில் போக்குவரத்துக்குத் தடை ஏற்படாத வகையில் பாலங்கள், வடிகான்கள், மதகுகள் போன்ற உட்கட்டமைப்பு

வசதிகளை அமைத்து, இவ்வகைப் பாதைகளது திருத்தவேலைகள், பராமரிப்புகளின் செலவைக் குறைப்பதற்காக வடிகான் தொகுகளையும் தடைச் சுவர்களையும் அமைத்துப் பொருத்தமான இடங்களில் பாதசாரிகள் பயணிக்கத் தேவையான வசதிகளை வழங்கவும் கவனம் செலுத்தப்படவுள்ளது. இதற்கென ரூ. 471.3 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## மின்வசதி

இற்றைவரை நாட்டில் மின்வசதிகள் வழங்கப்படாத சுமார் 2 இலட்சம் குடும்பங்கள் காணப்படுகின்றன. கல்வி கற்கும் பிள்ளைகளைக் கொண்டுள்ள, எனினும் மின்வசதி இல்லாத 150,000 வீடுகள் அளவில் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை அனைத்துக்கும் 2016 ஆம் ஆண்டில் மின்வசதியை வழங்க அரசு திட்டமிட்டு வருகின்றது. இதற்கமைய மத்திய மாகாணத்துக்குள் காணப்படும் மின்வசதியற்ற குடும்பங்களுக்கும் மின்வசதி வழங்கப்படும். எனவே, நாம் மின்சாரத்தைச் சிக்கனமாக்குவதையும், மாற்றுச் சக்தி வளங்களை அறிமுகம் செய்வது பற்றி அறிவூட்டம் செய்யவும் வேண்டியுள்ளது. மேலும், மத்திய மாகாணத்தில் சூரிய சக்தியைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சுற்றாடலும் காணப்படுகின்றது. உதாரணத்துக்காக மாகாண சபைக் கட்டடத் தொகுதியில் பொருத்தப்பட்டுள்ள சூரியசக்தித் திட்டத்தின் மூலம் மாதாந்தம் 3 இலட்ச ரூபாவுக்கும் அதிகமான தொகையைச் சேமித்துக்கொள்ள முடிகின்றது. இந்த முறையை ஏனைய பாரிய கட்டடங்களுக்கும் விரிவுபடுத்துவது முக்கியமாகும். இதற்கென ரூ. 10 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## வீடமைப்பு

ஒவ்வொரு பிரசையினதும் தலைக்கு நிழல் இருத்தல் வேண்டும் என்பது எமது நம்பிக்கையாகும். வீடொன்றை அமைத்துக்கொள்வதற்கான வசதிகள் இல்லாத மக்களுக்கான வீட்டுக்கடன் பெற்றுக்கொள்ள வசதி செய்வதும், கட்டியெழுப்பப்பட்ட வீட்டின் எஞ்சிய பகுதியை நிறைவு செய்துகொள்ளவென உதவி வழங்குவதும், கூரைத்தகடுகளை வாங்குவதற்கான உதவுநிதி வழங்குவதும் எமது கடமையெனக் கருதி, இதற்கென ரூ. 9.0 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## போக்குவரத்து விவகாரம்

மாகாணத்துக்குள் பதிவுசெய்யப்பட்டுள்ள வாகனங்களது வருமானச் சான்றிதழ்களை வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்வதற்குரிய வசதிகள் 2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. இதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான அடிப்படைக் கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டிலிருந்து இந்த முறை செயற்படுத்தப்படுமென்பதால், வாகன உரிமையாளர்கள் நேரத்தைச் சேமித்து மிக இலகுவில் வாகன வருமானச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், போக்குவரத்துப் பிரிவின் மூலம் ஆற்றப்படவேண்டிய இன்னுமொரு முக்கிய கருமமாக இருப்பது பாதை நெரிசலைக் குறைப்பதும், வீதி விபத்துக்களைக் குறைத்து பயணிகளது நம்பிக்கைக்கு உரிய சேவையை வழங்க நடவடிக்கை எடுப்பதும், பிரதான நகரங்களைப் போன்றே உப நகரங்களிலும் பஸ் தரிப்பிடங்களை அமைத்து மக்களுக்கு வசதிகள் செய்யவும், விசேடமாகப் பாடசாலைப் பிள்ளைகளது போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளும் வேன் மற்றும் பஸ் வண்டிகள் பேரில் விசேட கவனம் செலுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கென ரூ. 17.0 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## பிரதம செயலாளர் அலுவலகம்

கௌரவ தலைவர் அவர்களே,

பொதுமக்களிடமிருந்து கௌரவ உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்காகப் பன்முகப்படுத்திய வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ரூ. 148 மில்லியனை, அதாவது ஒரு உறுப்பினருக்கு ரூ. 25 இலட்சம் வீதம் வழங்க முன்மொழிவதுடன், மாகாணத்துக்குள் குறை விருத்தியைக் கொண்டுள்ள பிரதேசங்களைத் தெரிந்தெடுத்து, அப்பிரதேசங்களது அபிவிருத்திக்கெனவும், மாகாணத்தின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கெனவும் விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற் கெனவும் ரூ. 15 மில்லியனையும், மாகாணத்தில் குறை விருத்தியைக் கொண்டுள்ள பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவுமென ரூ.

100 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். மேலும், மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்களது அறிவைக் காலத்துக்கேற்ற வகையில் இற்றைப்படுத்தி, அவர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்கவும், நாடளாவிய ரீதியில் அவசியம் சித்தியடையவேண்டிய தேர்வுகளுக்கான பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தவும் என ரூ. 35 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். மாகாணத்தின் வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கும், மற்றும் வருமானங்களை ஈட்டும் கருமங்களைப் பிரதேச செயலகங்களே மேற்கொள்கின்றன. இதற்கென அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகள் மிகவும் பழையவை என்பதனால், அவர்களுக்குப் புதிய கணினிகளை வழங்கவும், அவர்கள் மாகாணத் திறைசேரிக்கு அனுப்பவேண்டிய மாதாந்த அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளவும், குறித்த கணக்கீடுகளை முறையாக மேற்கொள்ளவும் ரூ. 2 மில்லியனை ஒதுக்கித் தரவும், கடந்த ஆண்டில் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களது மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகளுக்கென ரூ. 122 மில்லியனை ஒதுக்கித் தரவும் முன்மொழிகின்றேன். மேலும், கடந்த ஆண்டில் நிருமாணிக்கப்பட்ட அரச அலுவலர்களது உத்தியோகக் குடிமனைகளது எஞ்சிய வேலைகளுக்கென ரூ. 1.5 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

மாகாணத்தில் நிலவும் வானிலை மற்றும் காலநிலையின்படி பல்வேறு வழிகளில் மத்திய மாகாணம் சேதங்களுக்கு உட்படுகின்றதனைக் கடந்தகால அனுபவங்கள் தெளிவுபடுத்துகின்றன. விசேடமாக மண்சரிவுகள், தீப்பிடித்தல், வெள்ளப்பெருக்கு, வரட்சியினால் தண்ணீரின்மை போன்ற அனர்த்தங்கள் நிகழும்போது மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்கென மத்திய மாகாண ஐந்து அமைச்சுக்களுக்குமென ரூ. 1.5 மில்லியன் வீதம் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## போதைப் பொருட் பாவனையைத் தவிர்த்தல்

போதைப் பொருட் பாவனையினால் நோயாளராவது மட்டுமன்றி நாட்டின் சிரமப் படையிலும் சேதங்கள் ஏற்படுகின்றன. இந்த நோயாளர்களைப் பராமரிக்கவென அரசு பெருந்தொகையான நிதியைச் செலவிட நேரிடுகின்றது. எனினும் எம நாட்டில் நிலவும் இலவச மருத்துவ சேவையின் காரணமாக இது மக்களால்

உணரப்படுவதில்லை. எனவே, மக்களை இதுபற்றி அறிவூட்டம் செய்து போதைப்பொருட் பாவனையைக் குறைத்தல் வேண்டும். ஆலோசகைள் வழங்குவதன் மூலம் அவர்களை அறிவூட்டம் செய்து இதனை ஓரளவேனும் குறைத்துக்கொள்ள முடியும் என்பது எனது நம்பிக்கையாகும். இவை மட்டுமன்றி, கஞ்சா, அபின், ஹெரோயின் போன்ற அபாயகரமான ஔடதங்களை விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் வர்த்தகர்களைச் சட்டத்தின் பிடிக்குள் சிக்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து அக்கறையுடன் செயற்பட்டால் எமக்கு இது பெரிய கருமமல்ல என்பது எனது நம்பிக்கையாகும்.

அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் இணைந்து பாடசாலைப் பிள்ளைகள் முதல் அனைத்து தரப்பினருடனும் இணைந்து போதைப்பொருள் பாவனையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது எமது நோக்கமாகும். இதன் மூலம் மக்களது ஆரோக்கிய நிலையைப் பாதுகாக்கவும், நோயற்ற மக்களைத் தோற்றுவிக்கவும், குடும்பத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தவும் தாம் ஈட்டும் வருமானத்தைப் பயனுள்ள வழியில் செலவழிக்கவும் முடிகின்றது. எனவே, அதற்கென நாம் அனைவரும் எம்மால் முடிந்த அளவில் செயற்பட முன்வருதல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

## முகாமைத்துவமும் நிருவாகமும்

கௌரவ தலைவர் அவர்களே,

மாகாண சபையின் நிருவாகச் செலவுகளுக்கெனப் பாரிய தொகை தேவைப்படுகின்றது. அதற்கேற்றவாறு மூலதனச் செலவுகள் மிகவும் குறைவாகும். ஊழியர்களது சம்பள வேதனங்களுக்கான செலவுகளைக் குறைக்க முடியாது. எனினும், மின்சாரம், எரிபொருள் என்பவற்றில் செலவிடப்படும் தொகையை முகாமை செய்ய முடியும். தேவையற்ற வகையில் ஏற்படும் செலவுகளை நல்ல முறையில் நிருவகிப்பது மிகவும் முக்கியமாகும். மேலும் மூலதனச் செலவுகளாகப் பாரிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளதனால் அதன் மூலம் உச்ச பயன்பாட்டைப் பெறவேண்டுமெனின் ஏற்கனவே முன்மொழிவுகளைத் தேர்ந்தெடுத்து செலவுகளைக் கணிப்பிட்டு, பொருத்தமான ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுத்து வேலைகளை ஆரம்பம் செய்வதாயின், வருடத்துக்குள் நிறைவு செய்து மக்களுக்கான சேவையை மேற்கொள்ள முடியும். உண்மையிலேயே

பொருத்தமான முன்மொழிவுகளைத் தெரிவுசெய்யாததன் காரணமாகவே வருட இறுதியில்அவற்றைத் திருத்தியமைத்து ஏதேனுமொரு முன்மொழிவை நிறைவேற்றிவிட ஒருசில நிறுவகங்கள் பழகியிருக்கின்றன. இதன் மூலம் மக்களுக்கு உச்ச அளவில் சேவைகள் கிடைக்குமா என்பது சந்தேகமே. இதன் பின்னர் இந்த நிலை ஏற்படாதவாறு நிறுவகத் தலைவர்கள் வழி செய்தல் முக்கியம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றேன். மேலும், பற்றுச்சீட்டுகளை முன்வைக்க வருட இறுதிவரை காத்திருப்பதனால் மாகாணத் திறைசேரி பல சிரமங்களை எதிர்கொள்ளவும் நேரிடுகின்றது. எனவே, ஒப்பந்தக்காரர்களை அறிவூட்டம் செய்து வருட ஆரம்பத்திலிருந்தே பற்றுச்சீட்டுகளை வழங்க முடியுமான வகையில்ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

கடந்த வருடத்தில் வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கையிலும் நான் சுட்டிக் காட்டிய விடயம் மாகாண சபைக்குரிய கட்டங்களுள் சில இன்னும் பயன்படுத்தப்படாது உக்கலடையும் நிலையில் உள்ளமையாகும். எனினும், இற்றைவரை ஒருசில கட்டடங்கள் இதுவரை பயன்பாட்டுக்கு உட்படுத்தப் படவில்லை எனத் தெரிகின்றது. எனவே, குறித்த அமைச்சுக்கும் திணைக்களங்களுக்கும் உரிய அவ்வாறான கட்டடங்களை இனங்கண்டு பிரதம செயலாளரிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், இந்த வருடத்திலிருந்து தேவையை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே நிருமாணப் பணிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே, கௌரவ அமைச்சர்களே, கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே,

இதுவரை நான் திறைசேரி மூலம் எமக்குக் வழங்கப்படும் வழங்கல்களை மாகாண அபிவிருத்திப் பணிகளில் ஒதுக்கும் வழிகள் பற்றிய விபரங்களை முன்வைத்தேன். இந்த நிதித் தொகை அந்தந்த திணைக்களங்கள் மூலம் மக்களைச் சென்றடைவதற்கான சேவைகளை வழங்கப் போதாமலுள்ளது என்பதனை நான் அறிவேன். எனினும், எமக்குக் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட வளங்களை வேறு வகையில் பங்கிட்டு வழங்க இயலாமல் உள்ளது. நடுவண் அரசின் அமைச்சுக்கள் ஊடாக எமது மாகாண சபைக்கு நிதி கிடைக்கவுள்ளது. அந்த நிதி தொடர்பிலும் எமது மாகாண சபை அலுவலர்கள் தான் செயற்படுதல்

வேண்டும். எனவே, எமது மாகாண சபைக்குள் செயற்படுத்தப்படவேண்டிய விசேட முன்மொழிவுகள் ஏதும் இருப்பின், அவர்களிடம் முன்வைத்து ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் உள்ளன. இது தொடர்பில் நாம் கவனம் செலுத்துதல் வேண்டும்.

கௌரவ தலைவர் அவர்களே,
அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடையே ஒதுக்கப்பட்டுள்ள நிதி எதனையும் வீணே செலவழிக்காது பொதுமக்களது சமூக, பொருளாதார, கலாசார, நலனோம்புகைச் சேவைகளை உயர்த்தும் வகையில் முன்மொழிவுகளை இனங்கண்டு, செயற்படுத்த நாம் அனைவரும் முயற்சித்தல் வேண்டுமென வலியுறுத்துகின்றேன்.

மேலும், சனாதிபதி செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்படும், நான் ஏற்கனவே குறிப்பிட்ட கண்டி நகர அபிவிருத்தி, சிறுநீரக நோயை இல்லாதொழித்தல், போதைப்பொருட்கள் கட்டுப்பாடு, நச்சுப்பொருட்களற்ற தேசிய உணவுப்பொருட்கள் உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் வனவள விருத்தி போன்ற நிகழ்ச்சித்திட்டங்களில் இந்தக் கௌரவ சபையின் அனைவரும், மாகாண சபையின் அனைத்து அலுவலர்களும், கூட்டாக, ஒற்றுமையாக ஒத்துழைத்து இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் இறுதிப் பெறுபேறுகளை அடைவதில் ஒன்றுபட்டுச் செயற்படுவோம் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே,
எமது மாகாணத்தின் நடவடிக்கைகளில் அக்கறையுடன் அனுசாசனம் வழங்கிவரும் அதி கௌரவ மகாநாயக்கர்கள் உள்ளிட்ட ஏனைய சமயத் தலைவர்களது வழிகாட்டல்கள், ஆலோசனைகளுக்கு எனது கௌரவமான நன்றிகளை முதலில் தெரிவித்துக் கொள்கினறேன்.

மேலும், எமது மாகாண நடவடிக்கைகளில், மாகாணத்தின் முன்னேற்றம் கருதி நிதமும் அக்கறையுடன் இருந்து அபிவிருத்திக் கருமங்களின்போது ஆர்வம் காட்டி எமக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிவரும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களுக்கும், கௌரவ பிரதம மந்திரி ரனில் விக்கிரமசிங்ஹ அவர்களுக்கும் எனது கௌரவமான நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும், மாகாண

சபையின் அனைத்து நடவடிக்கைகள் மீது நிதமும் கவனம் செலுத்தி எம்மைச் சரியான திசையில் செல்ல உற்சாகம் வழங்கும் கௌரவ ஆளுநர் திருமதி சுரங்கனி எல்லாவல அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன். எமது மாகாண சபையை வழிநடத்தி, அதன் செயற்பாடுகளைப் பக்கச் சார்பின்றி மேற்கொண்டுவரும் கௌரவ தலைவர் அவர்களுக்கும், உபதவைருக்கும் கௌரவ அமைச்சர்களுக்கும் எனது மனப்பூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், மாகாண சபையின் நடவடிக்கைகளின்போது எமது குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைச் சரியான வழியில் மேற்கொள்ள ஆலோசனைகளை முன்வைக்கும் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர் குழுவுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

மேலும் மாகாணசபையின் ஒட்டுமொத்த அரச ஊழியர்களையும் வழிநடத்தி, நிதி முகாமை, அபிவிருத்திப் பணியகிள்ன முன்னேற்றங்களை விசாரித்தறிந்து, குறைகளைக் களைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரதம செயலாளர், ஆளுநர் செயலாளர், அரச சேவைகள் ஆணையத்தின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். மத்திய மாகாண சபையின் செயலாளர், உதவிச் செயலாளர் உள்ளிட்ட சபைச் செயலகத்தின் பணியாட் குழுவினர் ஆற்றும் உயர் பணியை மதித்து அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

எமது அபிவிருத்தி முன்மொழிவுகளில் அதிகமானவற்றைச் செயற்படுத்தும் நகர பிதாக்கள், பிரதேச சபைகளது கௌரவ தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மூவர் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அவர்களது பணியாட் குழுவினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

மாகாண சபையின் நடவடிக்கைகளை மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் முன்வைக்கும் எமது ஊடகத்துறை அன்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். எமக்குப் பாதுகாப்பு வழங்கி ஆற்றும் சேவைக்கெனக் குண்டசாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு அலுவலர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, எமது எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்வதற்கென கௌரவ தலைவர் அவர்கள் உள்ளிட்ட உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன்.

**உங்கள் அனைவருக்கும் தலதாவின் மகிமை கிட்டுக.**

**சரத் ஏகக்நாயக்க**
முதலமைச்சர்
மத்திய மாகாணம்

| கல்வி அபிவிருத்தி | | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|---|
| **தொ. இல.** | **செயற்றிட்டம் / நிகழ்ச்சித்திட்டம்** | **கண்டி** | **மாத்தளை** | **நுவரெலிய** | **மொத்தம்** |
| | பாடசாலைக் கட்டடங்களில் வேலைகள் முடிவும் பராமரிப்பும் | 213.20 | 114.40 | 192.40 | 520.00 |
| | பொது வசதிகள், குடிமனைகள் நிருமாணம் | 82.00 | 44.00 | 76.00 | 200.00 |
| | ஆசிரியர்கள் பயிற்சி | 51.25 | 27.50 | 46.25 | 125.00 |
| | குடிநீர் மற்றும் சுகநல வசதிகள் | 61.50 | 33.00 | 55.50 | 150.00 |
| | பாடசாலைக் கல்வியை விட்டு விலகும் பிள்ளைகளுக்குத் தொழிற் பயிற்சியை வழங்குதல் | 20.00 | 11.00 | 18.50 | 50.00 |
| | கல்வி தொடர்பான ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் | | | | |
| | உலக வங்கி கல்வி அபிவிருத்தித் திட்டம் | | | | 430.00 |
| | UNICEF கல்வி அபிவிருத்தித் திட்டம் | | | | 26.04 |

| உள்ளூராட்சி | | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|---|
| | | கண்டி | மாத்தளை | நுவரெலிய | மொத்தம் |
| | உள்ளூராட்சிப் பாதைகள் அபிவிருத்தி | 45.10 | 24.20 | 40.70 | 110.00 |
| | சமூக / கிராமிய குடிநீர் வழங்கல் | 20.50 | 11.00 | 18.50 | 50.00 |
| | திண்மக் கழிவுப் பொருள் முகாமை | 22.55 | 12.10 | 20.35 | 55.00 |
| | ஏனைய உள்ளூராட்சிச் சேவைகள் | 10.25 | 5.50 | 9.25 | 25.00 |
| | நகர சபைகளது கொள்திறன் அபிவிருத்தி | | | | 1.00 |
| | கூட்டுறவு அபிவிருத்தி | 1.23 | 0.66 | 1.11 | 3.00 |
| | கலாசார விவகாரங்கள் | 3.69 | 1.98 | 3.33 | 9.00 |
| | காணி அபிவிருத்தி | 2.05 | 1.10 | 1.85 | 5.00 |

| சுகாதார அபிவிருத்தி | | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|---|
| | மேற்குலக சுகாதார விவகாரங்கள் | கண்டி | மாத்தளை | நுவரெலிய | மொத்தம் |
| | மருத்துவமனைக் கட்டடங்கள் நிருமாணமும் பராமரிப்பும் | 127.10 | 68.20 | 114.70 | 310.00 |
| | பொது வசதிகள், குடிமனைகள் | 73.80 | 39.60 | 66.60 | 180.00 |
| | மருத்துவ உபகரணங்கள் கொள்வனவும் பராமரிப்பும் | 30.75 | 16.50 | 27.75 | 75.00 |
| | தோற்று நோய்கள் கட்டுப்பாடு | 24.60 | 13.20 | 22.20 | 60.00 |
| | சுகாதார மருத்துவ அலுவலர்களது அலுவலகங்களில் சுகாதார நடவடிக்கைகளை விருத்தி செய்தல் (பிரதேச மற்றும் ஆதார வைத்தியசாலைகள்) | 24.60 | 13.20 | 22.20 | 60.00 |
| | வெளி நோயாளர் பிரிவுகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள் அபிவிருத்தி | 24.60 | 13.20 | 22.20 | 60.00 |
| | ஏனைய மேற்குலக மருத்துவ விவகாரங்கள் | 20.50 | 11.00 | 18.50 | 50.00 |
| | உலக வங்கி சுகாதார அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | | | | 365.00 |
| | JICA உதவும் மருத்துவ மனைகள் அபிவிருத்தி | | | | 248.00 |

| தேசிய மருத்துவம் மற்றும் ஆயுர்வேத விவகாரங்கள் | | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|---|
| | | கண்டி | மாத்தளை | நுவரெலிய | மொத்தம் |
| | தேசிய ஆயுர்வேத மருத்துவம் பாதுகாப்பும் அபிவிருத்தியும் | 9.84 | 5.28 | 8.88 | 24.00 |
| | மூலிகைத் தோட்டங்களை ஏற்படுத்துதல், மருந்துகள் உற்பத்தி | 14.76 | 7.92 | 13.32 | 36.00 |
| | பயன்படுத்தப்படாத மருத்துவ நிலையங்களிலும் அரச கட்டடங்களிலும் மரபு ரீதியான மருத்துவ சேவைகளை நடாத்துதல் | 9.84 | 5.28 | 8.88 | 24.00 |
| | ஏனைய மூலதனச் சொத்துக்களது பராமரிப்பு | 7.38 | 3.96 | 6.66 | 18.00 |
| | தேசிய மருத்துவம் தொடர்பான ஏனைய சேவைகள் | 7.38 | 3.96 | 6.66 | 18.00 |
| | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கை | 6.15 | 3.30 | 5.55 | 15.00 |
| | சமூக சேவைகள் | 6.97 | 3.74 | 6.29 | 17.00 |

| கைத்தொழில், நெசவுத்தொழில், மகளிர் மற்றும் இளைஞர் விவகாரம் | | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|---|
| | | கண்டி | மாத்தளை | நுவரெலிய | மொத்தம் |
| | கைத்தொழில் அபிவிருத்தி | 7.38 | 3.96 | 6.66 | 18.00 |
| | கிராம அபிவிருத்தி | 12.30 | 6.60 | 11.10 | 30.00 |

| மாகாணப் பாதைகள், மின்வசதி, சக்திவளம், வீடமைப்பு, போக்குவரத்து நடவடிக்கைகள் பற்றிய அமைச்சு | | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|---|
| | | கண்டி | மாத்தளை | நுவரெலிய | மொத்தம் |
| | பெருந்தெருக்களை காப்பற் செய்வதும் அபிவிருத்தி செய்வதும் | 77.90 | 41.80 | 70.30 | 190.00 |
| | பாதைகள் தொடர்பான தடுப்பு வடிகான்கள் பராமரிப்பும் திருத்தவேலையும் | 105.49 | 56.61 | 95.20 | 257.30 |
| | ஏனைய திட்டங்கள் | 9.43 | 5.06 | 8.51 | 23.00 |
| | வீடமைப்பு அபிவிருத்தி | 3.69 | 1.97 | 3.33 | 9.00 |
| போக்குவரத்து விவகாரங்கள் | | | | | |
| | பஸ் தரிப்பிடங்கள், சுற்றாடல் சுகநல சேவை வசதிகள் | 5.33 | 2.86 | 4.81 | 13.00 |
| | ஓட்டுநர் மற்றும் ஏனைய அலுவலர்களது கொள்திறன் விருத்தி | 1.64 | 0.88 | 1.48 | 4.00 |
| | கிராமிய மின்வசதி | 4.10 | 2.20 | 3.70 | 10.00 |

| விவசாய, விலங்குவள உற்பத்தி, சிறிய நீர்ப்பாசனம் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|
| விவசாய நடவடிக்கைகள் | **கண்டி** | **மாத்தளை** | **நுவரெலிய** | **மொத்தம்** |
| உற்பத்தியையும் விளைதிறனையும் அபிவிருத்தி செய்தல் (நெல், மேலதிக பயிர்கள்) | 28.70 | 15.40 | 25.90 | 70.00 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவு வர்த்தகப் பயிர்களுக்கானவை (பழவகை, காளான், காய்கறி, வெற்றிலை போன்றவை) | 22.55 | 12.10 | 20.35 | 55.00 |
| விவசாய உற்பத்தி தொடர்பான கைத்தொழில்களின் விருத்தியும் பெறுமதி சேர்கப்கும் உற்பத்திகளும் | 10.25 | 5.50 | 9.25 | 25.00 |
| தூர்ந்துபோன வயல்கள் தொடர்பான மாற்றுப் பயிர்ச்செய்கை (கௌபி, இஞ்சி, பயறு, கீரை வகைகள்) | 6.15 | 3.30 | 5.55 | 15.00 |
| விவசாயப் பயிர்களது பராமரிப்பும் நிருமாணங்களும் | 12.30 | 6.60 | 11.10 | 30.00 |
| மாகாண விவசாயப் பண்ணைகளது பராமரிப்பும் பயிற்சியும் | 16.40 | 8.80 | 14.80 | 40.00 |
| ஏனைய விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் | 10.25 | 5.50 | 9.25 | 25.00 |
| சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நடவடிக்கைகள் | 14.35 | 7.70 | 12.95 | 35.00 |
| நன்னீர் மீன்பிடி | 2.87 | 1.54 | 2.59 | 7.00 |

| விலங்குவள உற்பத்தியும் சுகாதார அபிவிருத்தியும் | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|
| மிருகவைத்திய நடவடிக்கைகள் | **கண்டி** | **மாத்தளை** | **நுவரெலிய** | **மொத்தம்** |
| சிறிய / நடுத்தர வர்த்தக விலங்கு உற்பத்திகள் | 11.48 | 6.16 | 10.36 | 28.00 |
| பண்ணைகளை நடத்த வசதிகள் வழங்குதல் | 11.48 | 6.16 | 10.36 | 28.00 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழில்களை ஏற்படுத்துதல் | 8.20 | 4.40 | 7.40 | 20.00 |
| கலப்பினப் பசுக்களது இனப்பெருக்கம் | 8.20 | 4.40 | 7.40 | 20.00 |
| பால் சேகரிப்பும் களஞ்சிய வசதிகள் வழங்குதலும் | 11.48 | 6.16 | 10.36 | 28.00 |
| விலங்குவள உற்பத்தியும் ஏனைய திட்டங்களும் | 5.74 | 3.80 | 5.18 | 14.00 |

| சுற்றுலா விவகாரம் | | ரூ. மில் | | | |
|---|---|---|---|---|---|
| | | கண்டி | மாத்தளை | நுவரெலிய | மொத்தம் |
| | சுற்றுலா பாதுகாப்பிடங்களது அபிவிருத்தி | 14.35 | 7.70 | 12.95 | 35.00 |
| | சுற்றுலா நிலையங்கள் தொடர்பான ஏனைய வசதிகள் வழங்குதல் | 8.20 | 4.40 | 7.40 | 20.00 |
| | சுற்றுலாத் தகவல் வழங்குதல் மற்றும் அது தொடர்பான பயிற்சி நடவடிக்கைகள் | 2.5 | 1.10 | 1.85 | 5.00 |